

அன்னிய ஆட்சி வேண்டாம்

எல்லாரும் ஓர் குலம்-எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்

எல்லாரும் ஓர் நிறை-எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டிக்காக
சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரால்
பிரசுரிக்கப்பட்டது.

விலை காலணா.

சுதந்திரப் பள்ளு

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று (ஆடு)

1. எங்கும் சுதந்திரம்
 என்பதே பேச்சு—நாம்
 எல்லோரும் சமமென்ப
 துறுதி யாச்சு
 சங்கு கொண்டே வெற்றி
 ஊதுவோமே—இதைத்
 தரணிக் கெல்லாமெடுத்
 தோதுவோமே. (ஆடு)

2. உழவுக்கும் தொழிலுக்கும்
 வந்தனை செய்வோம்—வீணில்
 உண்டு களித்திருப் போரை
 நிந்தனை செய்வோம்
 விழலுக்கு நீர் பாய்ச்சி
 மாய மாட்டோம்—வெறும்
 வீணருக் குழைத்துடலம்
 ஓய மாட்டோம். (ஆடு)

3. நாமிருக்கும் நாடு நம
 தென்பதறிந்தோம்—இது
 நமக்கே யுரிமை யா
 மென்பதறிந்தோம்—இந்தப்
 பூமியிலெவர்க்கு மினி
 அடிமை செய்யோம்—பரி
 பூரணனுக்கே யடிமை
 செய்து வாழ்வோம். (ஆடு)

அன்னிய ஆட்சி வேண்டாம்.

இந்தியாவின் வறுமை

உலகிலேயே செல்வத்திற் சிறந்த தேசம் என்று முற்காலத்தில் இந்தியா பெயர் பெற்றிருந்தது. அந்நாளில் இந்தியாவுக்கு யாத்திரையாக வந்த பிரயாணி ஒவ்வொருவரும் இந்நாட்டின் அளவிலா ஐசுவரியத்தைக் குறித்து வியந்து எழுதியிருக்கிறார்கள். பாரத நாட்டின் பெருஞ் செல்வத்தைப்பற்றிக் கேள்வியுற்று அயல் நாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு வந்து குடியேறினவர்கள் அளவில் அடங்காதவர்கள். அத்தனை பேரையும் பாரதத் தாய் அன்புடன் ஏற்றுத் தன் மக்களாகவே கொண்டு ஆதரித்து வந்தாள்.

தற்போது உலகத்திலேயே வறுமை மிகுந்த தேசம் எது வென்றால், நமது பாரதநாடேயாகும். பாரத மக்களைப் போன்ற ஏழைகள் உலகில் வேறெங்கும் இல்லை. இந்தியர்களின் சராசரி வருமானம் தலைக்கு ஒரு நாளைக்கு 1 அணா 7 பைசாதான். இத்துடன் வேறு சில நாட்டாரின் சராசரி வருமானத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்.

தேசம்.	நாளொன்றுக்கு சராசரி தலா வருமானம்.
இங்கிலாந்து	2—1—4
அமெரிக்கா	3—0—0
ஆஸ்திரேலியா	2—4—0
கானடா	1—10—8
இந்தியா	0—1—7

நெஞ்சு பொறுக்குதில்லையே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதில்லையே
கஞ்சி குடிப்பதற்கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சிமடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்க வோர் வழியில்லையே

இந்தியாவின் தற்கால தரித்திரம் நீங்கவேண்டுமானால், அன்னிய ஆட்சி நீங்கி நாம் சுதந்திரம் பெறவேண்டும். ஆகையினால் தான் பூரண சுயராஜ்யம் ஸ்தாபிக்க வேண்டுமென்று காங்கிரஸ் மகாசபை தீர்மானித்திருக்கிறது.

கைத்தொழில் அழிவு

ஒரு நாட்டின் செல்வப் பெருக்கிற்கு முக்கிய சாதனங்களாயிருப்பவை இரண்டு. ஒன்று அந்நாட்டின் இயற்கை வளம். இரண்டாவது நாட்டு மக்களின் கைத்தொழில். இந்தியாவில் அன்னிய ஆட்சியினால் விளைந்த கேடுகளில் முக்கியமானது என்னவென்றால், நாட்டு மக்களின் கைத்தொழில் நாசமடைந்ததேயாகும்.

ஆதிகாலந்தொட்டு இந்தியா தேசம் நெசவுத் தொழிலில் பெயர் பெற்றிருந்தது. முதன்முதலில் பருத்தியை நூற்றுத் துணியாக நெய்யும் தொழிலைக் கண்டுபிடித்தவர்கள் இந்தியரேயாவர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் நெய்த அற்புதமான ஆடைகள் ரோமாபுரி முதலிய அயல் நாடுகளுக்குப் போய்க்கொண்டிருந்தன. உலகெங்குமுள்ள அரசர்களும் தனிகர்களும் ஏராளமான பொன் கொடுத்து டாக்கா மஸ்லின் முதலிய நயமான ஆடைகளை வாங்கிப் பெருமையுடன் அணிந்து வந்தார்

கள். சுமார் நூறு வருஷங்களுக்கு முன்புகூட இந்தியாவில் வசித்துவந்த அனைவருக்கும் வேண்டிய துணிகள் அவ்வளவும் இந்தியாவிலேயே நூற்ற நூலால் இந்தியாவிலேயே கைத்தறிகளில் நெய்யப்பட்டன. இது தவிர இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குத் துணி போய்க்கொண்டிருந்தது. ஆனால் தற்போது வருஷந்தோறும் 60 கோடி ரூபாய் துணிக்காக மட்டும் நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பிவருகிறோம். கோடிக்கணக்கான ஏழைப் பெண்களுக்கு ஒழிந்தநேர வேலையாயிருந்த கைராட்டினத் தொழில் அடியோடு நசித்துவிட்டது. கைத்தறி நெசவுத் தொழிலும் வெகுவாகக் குறைந்துபோயிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் வெளிநாடுகளிலிருந்து வரும் சீமைத் துணியை ஜனங்கள் வாங்கிக் கட்டுவதே.

அழிந்துபோன கைத்தொழிலுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க என்ன செய்யவேண்டும்? அரசாங்கம் ஜனங்கள் கையில் இருந்தால், அயல்நாட்டுத் துணி இறக்குமதிக்கு அதிக வரி போட்டுத் தடுத்து நமது தொழிலை ஆதரிக்கலாம். மகாத்மா காந்தி சத்தியாக்கிரஹப்போர் தொடங்குவதற்குமுன் சர்க்காருக்குப் பதினொரு சமாதான நிபந்தனைகள் சொன்னார். "சுதேசித் துணித் தொழிலைக் காப்பாற்ற அன்னியத் துணிக்கு வரி போடுங்கள்" என்பது அவற்றில் ஒரு நிபந்தனை. இதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் சம்மதிக்கவில்லை, சம்மதிக்கவும் மாட்டார்கள்.

சென்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தில் மந்திரியாயிருந்த ஸர் வில்லியம் ஜான்ஸன் ஹிக்ஸ் என்பவர் என்ன சொன்னார் தெரியுமா? "இந்தியாவை நாம் கைப்பற்றி வைத்திருப்பது இந்தியர்களின் நன்மைக்காகவல்ல. அப்படிச் சொல்வது வெறும் மோசம். லங்காஷயர் துணி வியாபாரத்துக்காகத்தான் இந்தியாவை வைத்திருக்கிறோம்" என்று வெளிப்படையாகச் சொன்னார்.

ஆகையினால் நமது நாட்டுக் கைத்தொழிலை வளர்த்து வருஷம் 60 கோடி ரூபாய் மீதி செய்யவேண்டுமானால், இந்தியா சுயராஜ்யம் பெறவேண்டும். ஆனால் சுயராஜ்யம் பெறும் வரையில் சும்

மாயிருக்கலாமா? கூடாது. இப்போதிருந்தே அன்னியத் துணியை அடியோடு விலக்கிவிடவேண்டும். கைத்தறியால் செய்யப்பட்ட துணியைத் தவிர வேறு எதுவும் உடுத்துவதில்லை, வாங்குவதில்லையென்று அனைவரும் சபதம் செய்யவேண்டும். எல்லாரும் கைராட்டையிலாவது, கைக்கதிரிலாவது நூல் நூற்கவேண்டும். கையால் நூற்றுக் கைத்தறியால் நெய்த கதராடையை பக்தியுடன் ஆதரிக்கவேண்டும். இதுவே மகாத்மா காந்தியின் கட்டளை; காங்கிரஸின் உத்திரவு. தமிழ் நாட்டிலுள்ள திறமை வாய்ந்த நெசவுக்காரர்களை பட்டினி போடும் சீமைத் துணியைக் கையாலும் தொடுவதில்லை யென்று அனைவரும் விரதங்கொள்ளவேண்டும்.

வரிவாங்குங் கொடுமை

இந்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கங்களும், ஸ்தல ஸ்தாபனங்களும் இந்திய மக்களிடம் வருஷந்தோறும் வசூலிக்கும் வரித் தொகை சுமார் 250 கோடி ரூபாய். இத்தொகையில் பெரும் பகுதி சொற்ப குடித்தனக்காரர்கள், ஏழைக் குடியானவர்கள், தொழிலாளிகள் இவர்களிடமிருந்தே வசூலிக்கப்படுகிறது.

		கோடி.
வெளிநாட்டிலிருந்து வரும் சாமான்களின்மேல் கடற்துறை வரிகள்	...	54
நில வரி, நீர் வரி	...	44
வருமான வரி	...	18
ஸ்டாம்பு வருமானம்	...	14
உப்பு வரி	...	7
கள்ளு, சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் மூலம் வருமானம்	...	23
ரயில்வே நிகர லாபம்	...	5
மற்ற வரிகள்	...	32
முனிஸிபாலிடி வரிகள்	...	38
ஜில்லா, தாலுக்கா போர்டு வரிகள்	...	15
ஆக மொத்தம் ரூ...		250 கோடி.

வரிகளில் இரண்டு வகை யுண்டு. ஜனங்கள் தெரிந்து கொடுக்கும் வெளிப்படையான வரி ஒரு வகை. ஜனங்கள் அறியாமலே அவர்களிடமிருந்து வசூலிக்கும் மறைந்த வரி இரண்டாவது வகை. நில வரி, வருமான வரி, ஸ்டாம்பு கட்டணம் முதலியவை ஜனங்கள் தெரிந்து கொடுக்கும் வரிகளாகும். மறைந்த வரி, உப்பு, மண்ணெண்ணெய், சீமைத் துணி, தீப்பெட்டி, சிகரெட்டு, பித்தளை செம்பு பாத்திரங்கள், சர்க்கரை, கள்ளு, சாராயம் முதலிய பண்டங்களின் விலை மூலமாய் வசூலிக்கப்படுகின்றது.

இந்தியக் குடியானவர்கள் சர்க்காருக்கு வரி கொடுப்பது தவிர, பெருங் கடன் பட்டவர்கள் என்பது உலகப் பிரசித்தம். வருஷந்தோறும் அவர்கள் கொடுக்கும் வட்டி 100 கோடி ரூபாய்க்குக் குறையாது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

கள்ளு வரியில் வருஷந்தோறும் 25 கோடி ரூபாய் சர்க்கார் வருமானம் பெறுகிறார்கள். சர்க்காருக்கு வரிமட்டும் 25 கோடி கிடைத்தால் மொத்தம் ஜனங்கள் கள்ளு, சாராயத்தில் செலவழிப்பது 100 கோடி ரூபாய் இருக்கவேண்டுமல்லவா?

இந்தியர்களின் வருமானம் அதிகமாவதற்கு வழியில்லாமலிருக்கையில், வரிச்சுமை மட்டும் அதிகமாகிக்கொண்டே யிருக்கிறது.

இந்தியர்களை அமுக்கித் தலைதூக்க முடியாமல் செய்யும் வரிப் பளுவை நீக்குவதற்கு வழி என்ன? மகாத்மா காந்தி சத்தியாக்கிரஹப்போர் துவக்குதற்குமுன் இராஜப்பிரதிநிதிக்கு விடுத்த பதினோரு நிபந்தனைகளில் மூன்று வரிச்சுமையைப் பற்றியவையாகும். (1) பூரண மதுவிலக்குச் செய்து கலால் வரியை ஒழியுங்கள், (2) நிலவரியைப் பாதியாக்குங்கள், (3) உப்பு வரியை நீக்குங்கள் என்று மகாத்மா கோரினார். சர்க்கார் அவற்றிற்கு இணங்கவில்லை. ஆகையினால்தான் மகாத்மா காந்தி பூரண சுயராஜ்யமே இவற்றிற்கெல்லாம் மருந்தென்று கண்டு சாத்வீகப் போர் துவக்கினார்.

தண்டச் செலவு

ஏழை இந்தியர்கள் தலையில் தாங்கமுடியாத பளுவைச் சுமத்தி வசூலிக்கும் வரிப்பணத்தை யெல்லாம் எப்படிச் செலவு செய்கிறார்கள் தெரியுமா? ஜனங்களின் நன்மைக்கான துறைகளில் செலவு செய்யும் தொகை மிகவும் சொற்பம், தண்டச் செலவுதான் அதிகம்.

அரசாங்கத்தார் முக்கிய இனங்களில் செலவு செய்யும் தொகைகளைப் பாருங்கள்.

		கோடி.
இராணுவ இலாகாச் செலவு	...	55
மற்ற சிவில் இலாகாக்களில் உத்தியோகஸ்தர் சம்பளம், படி முதலியவை	...	70
கட்டிடங்கள்	...	16
சர்க்காரால் வாங்கப்பட்ட கடன்களுக்கு வட்டி	...	20

இராணுவமல்லாத சிவில் உத்தியோகஸ்தர்களின் சம்பளக் கணக்கில் 16 கோடி ரூபாய்க்குமேல் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளமேயாகும். இதில் $6\frac{1}{2}$ கோடி ரூபாய் வெள்ளைக்கார உத்தியோகஸ்தர்கள் பெறுகிறார்கள் என்று அரசாங்க பொக்கிஷ மந்திரியே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

மொத்த வருமானத்தில் ஒரு பெரும் பகுதியை இராணுவம் விழுங்கிவிடுகிறது. இவ்வளவு செலவு செய்து பெரிய சைன்யம் இந்தியாவில் வைத்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட கானடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் மிகவும் சொற்பத் தொகையே சைன்யத்திற்காக செலவு செய்கிறார்கள். இந்தியாவில்மட்டும் பெரிய தொகை செலவு செய்வதேன்?

ஒருவன் வீட்டுக்கோ பட்டிக்கோ காவல் நாய் வைத்துக் கொண்டால், அது எஜமானன் சொற்படியும் வீட்டிலுள்ள குழந்தைகளிடம் அன்பாகவும் நடந்து வரவேண்டுமெல்லவா? இதுபோலவே இந்தியக் காவற்படையானது இந்திய மகாஜனங்களுடைய உத்திரவுக்குக் கட்டுப்பட்டிருந்தால்தான் உண்மையான காவற்படையாகும். இந்திய மகா ஜனங்களை பயமுறுத்திவரும் படை, ஜனங்களின் தைரியத்தைக் குறைக்குமே யொழிய நன்மை பயக்காது.

இந்தியர்களை அடக்கி வைப்பதற்காகவும் ஏதேனும் யுத்தம் நேர்ந்தால் இங்கிலாந்துக்கு உதவி செய்வதற்காகவும் இவ்வளவு பெரிய சைன்யம் வைத்திருக்கிறார்கள். நியாயமாக இங்கிலாந்து செலவு செய்யவேண்டிய தொகை ஏழை இந்தியர்கள் மீது சுமத்தப் பட்டிருக்கிறது. சைன்யம் முழுதும் இந்திய சிப்பாய்கள் அடங்கியதாயிருந்தால் செலவு ஓரளவு குறையும். ஆனால் ஆங்கில சைன்யம் ஏராளமாய் வைத்திருப்பதால் செலவும் அதிகம் ஆகிறது. தற்போது இந்திய இராணுவத்தில் 60,000 வெள்ளைக்காரர்களும் 1,59,000 இந்தியர்களும் உளர். இந்தியச் சிப்பாய்க்கு வருஷச் செலவு ரூ. 400 தான். ஆனால் ஆங்கிலச் சிப்பாய் ஒருவனுக்கு ஆகும் செலவு ரூ. 2,000.

சிவில் நிர்வாகத்திலும் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் ஏராளமான சம்பளம் வாரிக் கொடுக்கிறார்கள். செல்வம் மிகுந்த இங்கிலாந்தில் முதன் மந்திரியின் மாதச்சம்பளம் சுமார் ரூ. 6,000. ஆனால் ஏழை இந்தியாவில் இராஜப்பிரதிநிதியின் சம்பளம் ரூ. 20,000. மாகாண கவர்னரின் மாதச் சம்பளம் ரூ. 10,000. வெள்ளைக்காரர்களுக்கு ஏராளமான சம்பளம் கொடுக்க வேண்டியிருப்பதால், வேற்றுமை காட்டாதிருக்கும்பொருட்டு இந்திய உத்தியோகஸ்தர்களுக்கும் அளவுக்குமேல் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. சுதந்திர ஜப்பானில் முதன் மந்திரியின் சம்பளம் மாதம் ரூ. 1,500 தான். உலகிலேயே பணம் பெருத்த தேசமான அமெரிக்காவில் மந்திரிகளின் மாதச் சம்பளம் ரூ. 3,000

தான். ஆனால் ஏழை இந்தியாவில் மாகாண மந்திரிகளுக்கு மாதச் சம்பளம் ரூ. 5,000.

அன்றாடம் பாடுபட்டு உழைத்துச் சாப்பிடும் ஏழைகள் உப்பு வரியாகவும், கள்ளுக்கடை வரியாகவும் கொடுக்கும் பணத்தைக் கொண்டு பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு இத்தகைய கொழுத்த சம்பளம் கொடுக்கிறார்கள். இவ்வுத்தியோகஸ்தர்களோ தாங்கள் ஜனங்களின் ஊழியர்கள், அவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு பிழைப்பவர்கள் என்பதை அடியோடு மறந்து, தங்களை எஜமானர்களாகக் கருதி இறுமாந்து திரிகின்றனர்.

பொது ஜனங்களின் நன்மைக்கான கல்வி, சுகாதாரம், விவசாயம் முதலிய துறைகளில் செலவு செய்யும் தொகை மிகவும் சொற்பம். இந்த இலாகாக்கள் பெயர் வைத்து கொஞ்சம் செலவு செய்வதும் பெரிய உத்தியோகஸ்தர்கள் சம்பளங்களிலேயே தொலைகின்றது. நூற்றைம்பது வருஷ ஆங்கில ஆட்சிக்குப் பிறகு இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 100 க்கு 7 பேர் தான். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை நீக்கினால் 1,000 ஆண்களில் 139 பேருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியுமென்று சொல்லலாம்.

ஆனால் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் இக்காலத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே கிடையாது. அந்நாடுகளில் ஏராளமான பணம் செலவழித்துக் கட்டாய இலவசக் கல்வி கற்பிக்கிறார்கள். மிகவும் பிற்போக்கான ஸ்பெயின் தேசத்திலேகூட 100க்கு 46 பேர் படிக்கத் தெரிந்தவர்கள்.

இந்தியாவில் விவசாய அபிவிருத்திக்காக சர்க்கார் செய்யும் முயற்சி மிகவும் சொற்பம். அதுவும் பலன் தருவதில்லை.

இராணுவச் செலவையும் பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தையும் குறைத்தால் கல்வி, சுகாதாரம், விவசாயம் முதலிய பொது நன்மைக்கான துறைகளில் பணம் அதிகம் செலவு செய்யலாம். இதற்காகத்தான் பூரண சுயராஜ்யம் பெறவேண்டுமென்று நமது தலைவர்கள் போராடி வருகிறார்கள்.

தந்த பொருளைக் கொண்டே—ஜனர்
தாங்குவ ருலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்ச மயர்வார்
நெஞ்சு பொறுக்குதிலையே.

சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டொருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பா லெவனே செல்வான்—அவன்
ஆடையைக் கண்டு பயந் தெழுந்து நிற்பார்
எப்போதும் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள் போலேங்கி நடப்பார்
நெஞ்சு பொறுக்குதிலையே.

நாணய மாற்று மோசம்

ஏழை இந்தியர்களின் செல்வம் நாசமாவதற்குக் காரணமாயிருப்பவைகளில் நாணயமாற்று என்பதும் ஒன்று.

மகாத்மா காந்தி சர்க்காருக்கு விடுத்த 11 நிபந்தனைகளில் இரண்டாவது என்னவென்றால் "நாணயமாற்று விகிதம் ரூபாய்க்கு 18 பென்ஸாக இருப்பதை மாற்றி ரூபாய்க்கு 16 பென்ஸ் ஆக்க வேண்டும்" என்பதுதான். இதன் ரகசியம் என்னவென்பதை அனைவரும் நன்கு அறிந்துகொள்ளவேண்டும்.

இந்தியா ஏராளமான மூலப்பொருள் விளையும் தேசம். இந்த மூலப்பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இப்படி ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு வெளிநாடுகளில் தங்க நாணயத்தில் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

சென்ற 1929-ம் வருஷம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான சரக்குகளுக்காகக் கிடைத்த தொகை 338 கோடி ரூபாய். ஆனால்

நாணய மாற்று விகிதம் 16 பென்ஸாக இருந்திருந்தால் இதே சரக்குகளுக்காக இந்தியா 380 கோடி ரூபாய் அடைந்திருக்கும். ஆதலின் இந்தியக் குடியானவர்களுக்கு 42 கோடி ரூபாய் நஷ்டம். வருஷந்தோறும் இவ்வாறே நடைபெறுகின்றது.

வருஷத்தில் 250 கோடி ரூபாய் பெறுமான உற்பத்திப் பொருள்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி யாகின்றன. 16 பென்ஸ் விகிதப்படி மேற்படி இறக்குமதிப் பொருள்களுக்கு இந்தியர்கள் 32 கோடி ரூபாய் அதிகம் கொடுக்கவேண்டி யிருந்திருக்கு மென்பது உண்மையே. ஆனால் இதைக் கழித்தால் வருஷம் ஒன்றுக்கு 10 கோடி ரூபாய் தேசத்திற்கு நிச்சயம் நஷ்டமாகின்றது.

இறக்குமதிப் பொருள்கள் இந்தியாவில் மலிவாகக் கிடைப்பதால் தேசத்திற்குப் பொதுவாகத் தீமையே யல்லாது நன்மை கிடையாது. நமது நாட்டுக் கைத்தொழிலும், விவசாயமும் அபிவிருத்தி யடைய இடமில்லாமல் நாசமாகின்றன.

நாணய மாற்றை வேண்டியபடி அமைக்கும் அதிகாரம் அரசாங்கத்தின் கையிலேயே இருக்கிறது. அவர்கள் இந்த அதிகாரத்தை பிரிட்டிஷாரின் லாபத்திற்கு அனுகூலமாகவும் இந்திய மக்களின் நன்மையைக் கருதாமலும் உபயோகித்து வந்திருக்கிறார்கள் என்பது இந்தியப் பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயம்.

இதுபோன்ற சூதுகளும், நஷ்டங்களும் நடைபெறாதிருக்கும் பொருட்டே காந்திமகான் "பூரண சுயராஜ்யம்" ஸ்தாபிப்பதற்காகப் போராடிவருகிறார்.

கடன் சுமை

இந்திய மகா ஜனங்களின் பேரால் இந்தியாவின் வருமானங்களை அடகு வைத்து சர்க்கார் கடன் வாங்கி வந்திருக்கிறார்கள். இக்கடன் சுமை வளர்ந்து இப்போது சுமார் 1,200 கோடி ரூபாய் ஆகி விட்டது. இதில் இருப்புப்பாதை, தந்தி, நீர்ப்பாசனம் முதலிய

வருமானம் வரக்கூடிய வகைகளுக்காக வாங்கிய கடன் 850 கோடி ரூபாய். மற்ற வருமானமில்லாத கடன்களுக்கு மட்டுமே வருஷம் ஒன்றுக்கு 20 கோடி ரூபாய் வரிப்பணத்திலிருந்து வட்டி செலுத்தி வருகிறோம்.

ஆதியில் இந்தியாவுக்கு வந்த ஆங்கில வியாபாரக் கம்பெனியின் பங்குத் தொகைகளும், அவர்கள் இந்தியாவில் பல பிரதேசங்களை சுவாதீனமாக்கிக் கொள்வதற்காகச் செய்த யுத்தங்களுக்கும் மோசடிகளுக்கும் செலவு செய்த தொகைகளும், நாம் கொடுக்க வேண்டிய கடனுகக் கணக்கிடப்பட்டிருக்கின்றன. மேற்படி வியாபாரக் கம்பெனியாரிடமிருந்து இந்திய ராஜாங்கம் விக்டோரியா மஹாராணியாரின் கைக்கு வந்தபோது மேற்படி செலவுகளெல்லாம் சேர்ந்து 70 கோடி ரூபாய் கடன் ஏற்பட்டது. இதன்பிறகு இந்தியாவுக்கு வெளியே பலதேசங்களில் நடத்திய யுத்தங்களுக்காக 40 கோடி ரூபாய் வரையில் கடன் எழுதினர்கள். நம்க்குச்சிறிதும் சம்பந்தமில்லாத ஜெர்மனி மகாயுத்தத்தில் நமது சர்க்காரால் 350 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, அதற்காகவும் நம்பேரில் கடன் எழுதப்பட்டது. நாணய மாற்று முறையினுல் விளைந்த நஷ்டத்துக்காகவும் பல கோடி ரூபாய் கடன் ஏற்பட்டது. ஆகையால் பாரபட்சமில்லாத விசாரணை சபை ஒன்றை அமைத்து மேற்படி கடன் கணக்கைச் சோதித்து, இந்தியா ஒப்புக்கொள்ள வேண்டிய பாகம் எவ்வளவு என்பதை நிர்ணயிக்க வேண்டுமென்று காங்கிரஸ் கோருகின்றது.

ஆளுவோர் யார்?

பாரத நாட்டில் வாழும் 35 கோடி ஜனங்களையும் ஆளுவோர் யார்?

முக்கியமாக ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்கள் அடங்கிய அதிகார வர்க்கத்தினர் தான் இந்திய அரசாங்க நிர்வாகத்தை இப்போது நடத்துகிறார்கள். இவர்களுக்கெல்லாம் தலைவர் இராஜப்பிரதிநிதி அல்லது கவர்னர் ஜெனரல்.

இந்தியாவின் கவர்னர் ஜெனரல் இங்கிலாந்து அரசரின் பிரதிநிதியாக இந்தியாவை ஆட்சி புரிகிறார். இங்கிலாந்திலுள்ள இந்திய மந்திரிக்கே அவர் பதில் சொல்ல வேண்டியவர். இந்திய மந்திரி, பிரிட்டிஷ் மந்திரி சபையில் ஒருவர்; பிரிட்டிஷ் முதன் மந்திரியினால் நியமிக்கப்படுகிறவர். இந்த முதன் மந்திரியும் மற்ற எல்லா மந்திரிகளும் இங்கிலாந்தின் பார்லிமெண்டு சபைக்குக் கட்டுப்பட்டவர்கள். பார்லிமெண்ட் சபையின் அங்கத்தினர் பிரிட்டிஷ் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இங்கிலாந்தில் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. ஆகவே ஆங்கில நாட்டில் வாழும் வயது வந்த ஆண், பெண் அனைவரும் சேர்ந்து இந்தியாவை ஆளுகிறார்கள். இங்கிலாந்தின் ஜனத்தொகை 4½ கோடி, இந்தியாவின் ஜனத்தொகை 35 கோடி. ஒரு தேசத்தின் மக்கள் மற்றொரு தேசத்தாரை ஆளுவதே எல்லா ஆட்சி முறைகளிலும் மிகவும் கேடானதாகும். ஏனெனில் இம்முறையின் கீழ் ஆளும் தேசத்தாரின் நன்மைக்காக ஆளப்படும் நாட்டின் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. ஆதலின் இந்திய மகாஜனங்களின் தன் மதிப்பையும் மற்ற நன்மைகளையும் பாதுகாக்கும் பொருட்டு இந்தியா சுயராஜ்யம் பெறுதல் இன்றியமையாததாகும்.

தேசமக்கள் வயிறார உண்டு உயிர் வாழ்ந்திருப்பதற்கே சுயராஜ்யம் முதன்முதலாக அத்யாவசியமாயிருப்பதைக் கண்டோம். நாம் நம் நாட்டில் சுயாட்சியுள்ளவர்களா யிருக்கவேண்டுமென்பதற்கு இன்னும் கணக்கிலடங்காத காரணங்கள் உண்டு. பிறநாட்டார் எவ்வளவு உயர்ந்த நோக்கமுடையவராயினும் தம் ஆட்சிக்குட்பட்ட ஓர் அன்னிய தேசத்தைச் சுயநலமின்றி அரசாட்சி செய்துவர முடியாது. சுயநலம் தோன்றும் காலத்து அது பிறரைப் பாதிப்பதாகவே இருக்கும். எனவே தான் "பர ராஜ்யம் எவ்வளவு சிறந்ததாயினும் சுயராஜ்யத்துக்கு ஈடாகாது" என ஓர் ஆங்கிலேய மகான் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்வந்த பின்னர் இந்தியா எவ்வளவோ நன்மை பெற்றுவிட்டதாகப் பறையறையப்படுகிறது. தந்தி தபால்

ஏற்படுத்தப்பட்டதென்றும், ரயில்வே ரஸ்தாக்களும் போடப்பட்டனவென்றும், வெளிநாடுகளுடன் வியாபாரம் விருத்தியாகிறதென்றும் கூறப்படுகின்றன.

ரயில் பாதைகளும், சாலைகளும், தந்தியும் சுதந்திர உணர்ச்சியை அடக்கத் துருப்புகளையும் போலீஸாரையும் அனுப்புவதற்கு உபயோகமாகின்றன. வெளிநாட்டு வியாபாரத்தால் இந்தியா போன்ற மூலப் பொருள்களுள்ள, ஆனால் கைதொழில் அபிவிருத்தியற்ற தேசத்துக்கு எவ்வளவு கஷ்டமேற்பட்டு வருகிறதென்று மேலே கூறப்பட்டிருக்கிறது. அன்னிய ஆட்சியில் கல்வியபிவிருத்தி மிகவும் கொஞ்சம். அக்கல்வியும் தேசமக்களைச் சீரழிப்பதாய், அடிமைப் புத்தியை வளர்ப்பதா யிருக்கிறது. ஆளுஞ் ஜாதியாரின் பாஷை அரசாங்க பாஷையாயிருப்பதால் சுதேச பாஷைகள் அபிவிருத்தி குன்றி நாளாக நாளாக க்ஷீணித்து வருகின்றன.

சுயராஜ்யம் வந்தால்

மகாத்மா காந்தியும் மற்ற தேசியத் தலைவர்களும் நடத்தும் சாத்வீகப் போர் வெற்றியடைந்து பாரதநாடு சுயராஜ்யம் பெற்றால் இந்திய மக்கள் அடையக்கூடிய நன்மைகள் என்ன?

(1) மதுபானம் தொலையும். பூரண மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்டு, கள்ளு, சாராயம், அபின், கஞ்சா ஒழிந்துபோகும். இந்தியாவின் ஏழைத் தொழிலாளிகளுக்கும் குடியானவர்களுக்கும் வருஷத்தில் குறைந்தது 75 கோடி ரூபாய் மீதியாகும். ஜனங்களின் சன்மார்க்கம் விருத்தியடையும். கொலை, களவு, குற்றங்கள் குறையும். நோய், நொடிகளும் குன்றும்.

(2) நாணய மாற்றும் நாணயச் செலாவணியும் இந்தியாவிற்கு அனுகூலமாக அமைக்கப்படும். இந்தியக் குடியானவர்கள் தங்கள் விளை பொருள்களுக்கு சரியான விலை பெறுவார்கள். கைத்தொழிலும் வர்த்தகமும் செழிக்கும்.

(3) நிலவரி போடும் முறை மாறுதலடையும். ஏழைக் குடியானவர்கள், சொற்ப மிராசுதார்கள் இவர்களுக்கு நிலவரி குறைக்கப்படும். விவசாய வளர்ச்சி, நீர்ப்பாசன அபிவிருத்தி இவைகளைக் கவனித்தல் சர்க்காரின் முதற்கடமையாயிருக்கும்.

(4) உப்பு வரி தொலையும். கடவுள் இயற்கையில் கொடுத்த உப்பை ஏழைகள் தாராளமாக எடுத்து உபயோகிப்பார்கள். கால்நடைகளுக்கும் எருவுக்குக்கூட உப்பு ஏராளமாய்க் கிடைக்கும்.

(5) சுதந்திர இந்தியாவில் சைன்யம் முழுதும் இந்தியர்களடங்கியதாயிருக்கும். இப்போது இராணுவத்துக்கு ஆகும் செலவு குறையும். இதில் மீதியாகும் பணத்தைக்கொண்டு வரிகள் குறைக்கப்படும்.

(6) பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளங்கள் குறைக்கப்படும். அப்போது பொது நலப்பற்றும் தேசபக்தியும் உள்ளவர்களே பெரிய உத்தியோகங்களுக்கு வருவார்கள். அவர்கள் சம்பளத்துக்காக வராமல், பொதுஜன அபிமானத்தைப் பெறும் பொருட்டே ஊழியம் செய்வார்கள். அதிகார மமதைகொண்டு ஜனங்களை மிரட்டும் தற்போதைய உத்தியோகஸ்தர்களைப் போலன்றி அவர்கள் ஜனங்களின் உண்மை ஊழியர்களாயிருப்பார்கள். லஞ்சம் வாங்கும் போட்டிகள் இரா.

(7) அன்னியத் துணி இறக்குமதி தடுக்கப்பெறும். கைத்தறித் தொழில்களும், இந்திய ஆலைகளும் அபிவிருத்தியடையும். ஆலைத் தொழிலாளிகள் தக்க சம்பளம் பெறுவார்கள். அவர்களுடைய மற்ற நலங்களும் கவனிக்கப்படும்.

(8) இந்தியாவின் கடற்கரை யோரங்களில் சுதேசிக்கப்பல்களே ஓட்டவேண்டுமென்று சட்டம் செய்யப்பெறும். இதனால் இந்தியாவில் முன்போல் கப்பல் தொழில் விருத்தியடையும். இத்தொழிலில் லக்ஷக்கணக்கான இந்தியர்களுக்கு வேலை கிடைக்கும். ஏழைகள் வயிற்றுப் பிழைப்புக்காக அயல்நாடுகளுக்கு ஓடவேண்டிய அவசியமிராது.

(9) ஆயுதச் சட்டம் ரத்து செய்யப்படும். நியாயமான நிபந்தனைகளுக்குட்பட்டு ஆயுதம் வைத்துக்கொள்ளும் உரிமை அனைவ

ருக்கும் இருக்கும். திருடர்கள், போக்கிரிகள் முதலியோரிடமிரு ந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளக் குடித்தனக்காரர்கள் சக்தி பெற்றிருப்பார்கள். எல்லோருக்கும் ஆயுதப்பயிற்சி இருக்குமாத லின் அயல்நாட்டார் படையெடுத்து வந்தால் போர்க்களம் சென்று தாய்நாட்டைப் பாதுகாக்க அனைவரும் ஆற்றல் உள்ளவர்களாயிருப் பார்கள்.

(10) எல்லாருக்கும் இலவசக்கல்வி அளிக்கப்பெறும். கூடிய சீக்கிரத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களே இந்தியாவில் இல் லாமற் போவார்கள். அரசாங்கக் காரியங்கள் எல்லாம் ஆங்கில மொழியில் நடைபெறுமல் தேசபாஷைகளிலேயே நடக்கும். ஆத லின் சகல ஜனங்களும் அரசாங்க நிர்வாகத்தில் கலந்து கொள்ளு வார்கள். பொதுஜனங்கள் விருப்பத்தின்படியே அரசாங்கத்தின் ஒவ்வொரு காரியமும் நடைபெறும்.

(11) பாரதநாடு அடிமைத்தனம் நீங்கி சுயராஜ்யம் அடைந் தால் உலகிலுள்ள மற்றப்பெரிய நாடுகளுக்கு நடுவே சரிநிகர் சமான மாக விளங்கும். அப்போது வேறு நாடுகளில் இந்தியர்கள் அவ மதிக்கப்படமாட்டார்கள். உலகெங்குமுள்ள இந்தியர்களின் குறை கள் நீங்கும். பாரதமக்கள் தலை நிமிர்ந்து நிற்பார்கள்.

(12) எல்லா ஜாதியாருக்கும் எல்லா வகுப்பாருக்கும் சமமான வாக்குரிமை அளிக்கப்பெறும். ஆகவே ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரை அடக்கி வைக்க இயலாது. ஏற்றத்தாழ்வுகள் எல் லாம் ஒழியும்.

நமது கடமை

மகாத்மா காந்தி முதலிய நமது அரும்பெரும் தலைவர்களும், ஸ்ரீமதிகள் சரோஜினிதேவி, ருக்மணி லக்ஷ்மீபதி, பிச்சமுத்தம்மை, கமலாதேவி முதலிய பெண்மணிகளும் பிரிட்டிஷ் சர்க்காரின் சிறைக் கூடங்களிலே கிடந்து துன்புற்றார்கள். இன்னும் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் சிறைபுகுந்தும், அடிபட்டும், மற்ற

போலீஸ் கொடுமைகளுக்கு உள்ளாகியும் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள். ஏன் இவர்கள் எல்லாம் இப்படித் துன்பங்களை அனுபவிக்கவேண்டும்? பாரத மக்கள் அனைவரும் அடிமைத்தனம் நீங்கி சுதந்திரம் பெற்று வறுமை ஒழிந்து உடுக்க உடையும் உண்ண உணவும் அடைந்து சுகமாக வாழவேண்டுமென்றே யல்லவா? இந்த தேசபக்த வீரர்கள்—வீரப்பெண் மணிகள் முதலியோரின் அரிய தியாகங்களுக்கு நாம் பாத்திரர்களாக வேண்டாமா?

மகத்தான இந்த தர்ம யுத்தத்தை, கத்தியும் இரத்தமும் இல்லாத சத்தியப் போரை நடத்தினோம். வெற்றிகொண்ட சமாதானத்திற்கு ஒப்புக்கொண்டிருக்கிறோம். இப்போது அனைவரும் பின்வரும் காரியங்களை மேற்கொண்டு செய்யவேண்டும்.

(1) பரதேசித் துணியை கையினால் தொடுவதில்லை யென்று விரதங் கொள்ளுங்கள்.

(2) கதரை யணியுங்கள்.

(3) கைக் கதிரிலாவது, இராட்டையிலாவது நூல் நூற்றுக் குவியுங்கள்.

(4) உங்கள் ஊரில் உள்ள கள்ளுக்கடைக்கு யாரும் போகாமல் செய்துகொள்ளுங்கள். மரங்களைக் கள்ளுக்கு விடவேண்டாம். குடிகாரர்களைப் போதனையின் மூலமாகவும், சாதிக் கட்டுப்பாட்டின் மூலமாகவும் குடியைவிடச் செய்வதற்கு முயலுங்கள்.

(5) நாட்டில் சகல ஜாதி சமூகங்களிடையிலும் வேற்றுமையை ஒழித்து ஒற்றுமை நிலைநாட்டுங்கள்.

(6) மகாத்மா காந்தியின் நல்லுபதேசங்களை நாடெங்கும் பரப்புங்கள். ஜனங்களிடையே சுதந்திர தாகத்தை வளர்த்து வாருங்கள்.

முரசு

வெற்றி யெட்டுத் திக்கு மெட்டக்
கொட்டு முரசே
வேத மென்றும் வாழ்க வென்று
கொட்டு முரசே
நெற்றி யொற்றைக் கண்ண னோடே
நிர்த்தனஞ் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று
கொட்டு முரசே.

க. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக்கெல்லா முத லாகும்—ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்.

உ. சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிர மாண்புறச் செய்வோம்.

ங. அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரு மொன்றென்று கொண்டால்.

ச. உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
வுலகில் மனித ரெல்லார்க்கும்
இடம் பெரிதுண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர் ?

ரு. அன்பென்று கொட்டு முரசே—அதில்
யார்க்கும் விடுதலை யுண்டு
பின்பு மனிதர்க ளெல்லாம்—கல்வி
பெற்றுப் பதம் பெற்று வாழ்வார்.

சா. அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய்
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
தெய்வ மெல்லோரையும் வாழ்த்தும்.

எ. ஒன்றென்று கொட்டு முரசே—அன்பின்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

திருவல்லிக்கேணி ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் அச்சிடப் பெற்றது.